KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.33

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

பெரியாழ்வாரின் பக்தி நெறி

The Devotional Path of Periyāḻvār

Dr. S. Brindha[1,*], Dr. C. Kurinji[1]

[1] Assistant Professors, Department of Tamil, Centre for Tamil Research, Ganesar College of Arts and Science (Affiliated to Bharathidasan University), Melasivapuri, Pudukkottai, Tamil Nadu, India.

***Corresponding author:** Dr. S. Brindha, brindhainiyan@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 7 October 2026
Revised: 10 October 2026
Accepted: 11 October 2026

Article ID
KIJTS-2026-0008

Peer review
Double-blind peer review

Keywords
Bhakti
Periyāḻvār
Tirumoḻi
Kṛṣṇa
Yaśodā
Piḷḷaittamiḻ
Vātsalya
Divya Dēśam
Vaiṣṇava Literature

ABSTRACT

The poets of the Tamil bhakti movement carried forward the inner conventions of Sangam literature, especially its akam (interior, love) themes, and anticipated later minor genres such as piḷḷaittamiḻ, ulā and ammāṉai. Among the twelve Āḻvārs, Periyāḻvār holds a distinctive place as the poet who sang of God as a child he himself was raising. This paper examines the 461 verses of the Periyāḻvār Tirumoḻi through descriptive and analytical methods. It studies the poet's identification with Yaśodā, the stages of Kṛṣṇa's infancy and boyhood, the adaptation of akam themes such as the mother's lament and elopement, the girls' game-song untiparattal, the Rāma episodes, the praise of sacred shrines (divya dēśam), the glory of devotees and the power of the divine name. The study argues that Periyāḻvār's devotion is founded on vātsalya, the parental mode of love, and that his Tirumoḻi laid the foundation for the piḷḷaittamiḻ genre in Tamil.

How to cite this article: Dr. S. Brindha, & Dr. C. Kurinji (2026). பெரியாழ்வாரின் பக்தி நெறி. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 427–437. https://doi.org/10.63300/kijts603112026.33
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

பெரியாழ்வாரின் பக்தி நெறி

The Devotional Path of Periyāḻvār

முனைவர் சே. பிருந்தா & முனைவர் சி. குறிஞ்சி

உதவிப் பேராசிரியர்கள், தமிழ்த்துறை, தமிழ் உயராய்வு மையம், கணேசர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலசிவபுரி, புதுக்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியத்திற்குப் பின்னர் அதன் அகப்பொருள் மரபையும் இலக்கிய உட்கூறுகளையும் வளர்த்தெடுத்த பெருமை பக்தி இலக்கியப் படைப்பாளர்களைச் சாரும். அகம் சார்ந்த கருத்துகளையும், பிள்ளைத்தமிழ், உலா, அம்மானை போன்ற பிற்காலச் சிற்றிலக்கியங்களின் கூறுகளையும் தம் பாசுரங்கள் வழி முதன்முதலில் வெளிக்கொணர்ந்தவர்கள் ஆழ்வார்கள். அவர்களுள் கண்ணனை வளர்த்த தாயாகத் தம்மைப் பாவித்துப் பாடிய பெரியாழ்வார், பக்தியை இலக்கியப் புதுமையுடன் இணைத்தவர். இக்கட்டுரை பெரியாழ்வார் திருமொழியின் 461 பாசுரங்களை, குறிப்பாகக் கண்ணனின் பிள்ளைப் பருவம், அன்னை அசோதையின் பாவனை, அகப்பொருள் துறைகள், உந்தி பறத்தல் போன்ற மகளிர் விளையாட்டுப் பாடல்கள், திவ்ய தேசச் சிறப்பு, அடியார் பெருமை, திருநாமச் சிறப்பு ஆகிய கூறுகளைப் பகுப்பாய்வு முறையில் ஆராய்கின்றது. பெரியாழ்வாரின் பக்தி நெறி வாத்சல்ய (தாய்மை) பாவனையை மையமாகக் கொண்டது என்பதையும், அது பிற்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கிய வகைக்கு வித்திட்டது என்பதையும் இவ்வாய்வு நிறுவுகின்றது.

கலைச்சொற்கள்: பக்தி நெறி, பெரியாழ்வார், திருமொழி, பாசுரங்கள், கண்ணன், அசோதை, பிள்ளைத்தமிழ், வாத்சல்ய பாவம், திவ்ய தேசம், சங்க இலக்கியம்.

Abstract

The poets of the Tamil bhakti movement carried forward the inner conventions of Sangam literature, especially its *akam* (interior, love) themes, and anticipated later minor genres such as *piḷḷaittamiḻ*, *ulā* and *ammāṉai*. Among the twelve Āḻvārs, Periyāḻvār holds a distinctive place as the poet who sang of God as a child he himself was raising. This paper examines the 461 verses of the *Periyāḻvār Tirumoḻi* through descriptive and analytical methods. It studies the poet's identification with Yaśodā, the stages of Kṛṣṇa's infancy and boyhood, the adaptation of *akam* themes such as the mother's lament and elopement, the girls' game-song *untipaṟattal*, the Rāma episodes, the praise of sacred shrines (*divya dēśam*), the glory of devotees and the power of the divine name. The study argues that Periyāḻvār's devotion is founded on *vātsalya*, the parental mode of love, and that his Tirumoḻi laid the foundation for the *piḷḷaittamiḻ* genre in Tamil.

Keywords: Bhakti, Periyāḻvār, Tirumoḻi, Kṛṣṇa, Yaśodā, Piḷḷaittamiḻ, Vātsalya, Divya Dēśam, Vaiṣṇava Literature

1. முன்னுரை

வைணவ இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். அவர்கள் படைத்தளித்த பாடல்களின் தொகுப்பு நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் என அழைக்கப்படுகின்றது. வைணவ மரபில் இது 'தமிழ் வேதம்' என்றே போற்றப்படுகின்றது (Carman and Narayanan). ஆழ்வார்களை 'மால் உகந்த ஆசிரியர்' என்றும், அவர்தம் பனுவல்களை 'செய்ய தமிழ் மாலைகள்' என்றும் மரபு சிறப்பித்துப் பேசுகின்றது.

விஷ்ணுசித்தர் என்ற இயற்பெயருடைய பெரியாழ்வார் வில்லிபுத்தூரில் வாழ்ந்தவர்; ஆண்டாளை வளர்த்த தந்தையாகவும் மரபில் போற்றப்படுபவர்.

நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் அவர் பாடிய திருப்பல்லாண்டுடனேயே தொடங்குகின்றது. இறைவனுக்கே பல்லாண்டு பாடியதால் 'பெரிய' ஆழ்வார் என்ற தனிப்பெயர் அவருக்கு வழங்குகின்றது. பன்னிரு ஆழ்வார்களுள் கண்ணன் அவதாரத்தில் தனித்த ஈடுபாடு கொண்டவர் இவர். உலகம் அறிந்த கிருஷ்ணாவதாரக் கதைகளை வாய்ப்பாகக் கொண்டு, தம் பக்திச் சிறப்பையும் பாட்டுத்திறத்தையும் ஒருங்கே வெளிப்படுத்தியவர். ஆழ்வார்களுக்குள்ளே, பகவானை வளர்த்த பக்தர் என்னும் தனிப்பெருமை பெற்றவர் பெரியாழ்வார் ஒருவரே (சீனிவாசன்).

தாய்மையையே இறைப்பற்றாக வெளிப்படுத்திய முதல் கவிஞர் என்ற வகையில், இந்திய அளவிலான கிருஷ்ண பக்தி வளர்ச்சியிலும் பெரியாழ்வாருக்கு முதன்மையான இடம் உண்டு (Ate, *Yasoda's Songs*). இத்தகைய சிறப்பினை உடைய பெரியாழ்வார் திருமொழியின் கருத்துகளைத் தெரிந்துகொள்ளும் பொருட்டும், அவரது பக்தி நெறி எத்தகையது என்பதை விளக்கும் பொருட்டும் இவ்வாய்வு அமைகிறது.

2. ஆய்வுநோக்கங்கள்

1. பெரியாழ்வார் திருமொழியின் அமைப்பையும் (பதிகம், பத்து, பாசுர எண்ணிக்கை) பொருள்ப் பகுப்பையும் விளக்குதல்.
2. அசோதை பாவனையில் வெளிப்படும் வாத்சல்ய பக்தியின் தன்மையை ஆராய்தல்.
3. சங்க அகப்பொருள் துறைகளையும் மகளிர் விளையாட்டுப் பாடல் மரபையும் ஆழ்வார் பக்திக்குப் பயன்படுத்திய முறையைக் காட்டுதல்.
4. திவ்ய தேசச் சிறப்பு, அடியார் பெருமை, திருநாமச் சிறப்பு ஆகியவற்றின் வழி ஆழ்வாரின் பக்தி நெறியை வரையறுத்தல்.

3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு விளக்கமுறை (descriptive) மற்றும் பகுப்பாய்வுமுறை (analytical) ஆகியவற்றைப் பின்பற்றுகிறது. பெரியாழ்வார் திருமொழியே முதன்மைச் சான்றாகும். திறனாய்வு நூல்களும் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் இரண்டாம் நிலைச் சான்றுகளாகக் கொள்ளப்பட்டன. பாசுரங்கள் (பத்து.திருமொழி.பாசுரம்) என்ற முறையில் சுட்டப்படுகின்றன; திருப்பல்லாண்டை முதல் திருமொழியாகக் கொள்ளும் பதிப்பு மரபு பின்பற்றப்படுகிறது. குறிப்புகளும் துணைநூல் பட்டியலும் MLA (ஒன்பதாம் பதிப்பு) நெறிப்படி அமைக்கப்பட்டுள்ளன.

4. முந்தைய ஆய்வுகள்

ம. பெ. சீனிவாசன் சாகித்திய அகாதெமியின் 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' வரிசையில் எழுதிய 'பெரியாழ்வார்' நூல், திருமொழியின் அமைப்பையும் பொருள்வரிசையையும் விரிவாக ஆராய்கிறது. ஃப்ரீட்ஹெல்ம் ஹார்டி (Friedhelm Hardy) தம் *Viraha-Bhakti* நூலில் தென்னிந்தியக் கிருஷ்ண பக்தியின் தொடக்க வரலாற்றில் ஆழ்வார்களின் பங்கை விளக்குகிறார் (Hardy). காமில் ஸ்வெலெபில் (Zvelebil), மு.

வரதராசனார் (Varadarajan) ஆகியோரின் தமிழ் இலக்கிய வரலாறுகள் ஆழ்வார் இலக்கியத்தைத் தமிழ் மரபின் தொடர்ச்சியாகக் காட்டுகின்றன. லின் எட் (Lynn Ate) முழுத் திருமொழியையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, தாயின் குரலில் இறைவனை அணுகும் அவரது புதுமையை ஆராய்கிறார் (Ate, *Yasoda's Songs*). பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையைப் பற்றிய பாலா ரிச்மனின் (Paula Richman) ஆய்வு, இவ்வகையின் வேர்களைப் பெரியாழ்வாரின் பாசுரங்களில் காண்கிறது (Richman). இவ்வாய்வுகள் ஆழ்வாரின் இலக்கியச் சிறப்பைப் பேசினாலும், அவரது பக்தி நெறியைப் பாசுரவழி முழுமையாகத் தொகுத்துரைக்கும் தமிழ் ஆய்வு குறைவே. அக்குறையை இவ்வாய்வு நிறைவு செய்ய முயல்கிறது.

5. திருமொழி – பெயரும் அமைப்பும்

ஆக்கியோரான பெரியாழ்வார் பெயரை முன்னிட்டு அவரது பிரபந்தத்திற்குப் 'பெரியாழ்வார் திருமொழி' என்று பெயர் வழங்குகின்றது. திவ்வியப்பிரபந்தத்தில் உள்ள நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி ஆகியனவும் இவ்வாறு பெயர்பெற்ற நூல்களே (Venkatesan). 'திருமொழியால் நின்ற திருமாலே' என இறைவனைப் பாடுகிறார் பூதத்தாழ்வார். திருமொழி என்பதற்கு வேதம் எனப் பொருள் கூறுவர். திருமொழியாய் நின்றவனையே தம் நூலுக்குப் பொருளாகக் கொண்டமையின் ஆழ்வார் நூலும் 'திருமொழி' எனச் சிறப்புற்றது.

பெரியாழ்வார் திருமொழியில் 10 அல்லது 11 பாசுரங்கள் கொண்ட 43 பதிகங்கள் உள்ளன. வைணவ மரபுப்படி பதிகம் ஒவ்வொன்றும் 'திருமொழி' எனவும், பத்துத் திருமொழிகள் கொண்ட தொகுதி 'பத்து' எனவும் குறிக்கப்பெறும். இதன்படி திருமொழியில் ஐந்து பத்துகள் உள்ளன; ஐந்தாம் பத்து நான்கு திருமொழிகளுடன் முடிவடைகிறது. மொத்தப் பாசுரங்கள் 461. முதற்பத்தில் ஒன்பது திருமொழிகளே உள்ளன. 'சீதக்கடலுள்' எனத் தொடங்கும் திருமொழி பதிகத்திற்குரிய எல்லையைக் கடந்து 21 பாசுரங்களைக் கொண்டுள்ளது. இரண்டாம் பத்தின் மூன்றாம் திருமொழி 'பன்னிரு திருநாமப்பாட்டு' ஆதலின், பலன்கூறும் (பலசுருதி) பாட்டையும் சேர்த்து 13 பாசுரங்களைக் கொண்டுள்ளது (சீனிவாசன் 28). இவ்விரண்டையும் தவிர ஏனைய திருமொழிகள் யாவும் 10 அல்லது 11 பாசுரங்கள் கொண்டவை.

பொருள் அடிப்படையில் திருமொழியை பின்வருமாறு பகுக்கலாம்:

பகுதி	திருமொழிகள்	மையப் பொருள்
கண்ணனின் பிள்ளைமை	முதற்பத்து – மூன்றாம் பத்து ஆறாம் திருமொழி (25 திருமொழிகள்)	அசோதை பாவனையில் கண்ணனின் பிறப்பு, வளர்ப்பு, விளையாட்டு
அகப்பொருள் துறைகள்	3.7, 3.8	நற்றாய் இரங்கல், உடன்போக்கு
மகளிர் விளையாட்டு, இராமக் கதை	3.9, 3.10	உந்தி பறத்தல்; அனுமன் சீதைக்குச் சொன்ன அடையாளங்கள்

பகுதி	திருமொழிகள்	மையப் பொருள்
இறைத்தேடலும் திவ்ய தேசங்களும்	நான்காம் பத்து	திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், திருவரங்கம்; அடியார் பெருமை; திருநாமம்
ஆழ்வாரின் சரணாகதி	ஐந்தாம் பத்து (4 திருமொழிகள்)	தம்மை ஆட்கொண்ட இறைவனைப் போற்றுதல்

கண்ணனின் அவதாரச் சிறப்புடன் தொடங்கும் இந்நூலின் முதல் இருபத்தைந்து திருமொழிகளில் ஆழ்வார் கண்ணனது பிள்ளைமைக் குணங்களிலும் இளம்பருவச் செயல்களிலும் ஈடுபடுகின்றார். பெரும்பாலான திருமொழிகளில் கண்ணனின் வளர்ப்புத்தாய் அசோதையாகவே தம்மைப் பாவித்துக்கொண்டு பேசுகின்றார். இவ்வகைப் பாவனையால் கண்ணனின் அவதாரம் தொடங்கி அதில் உண்டான சுவையெல்லாம் ஒன்றுவிடாமல் அனுபவிக்கின்றார்.

6. திருமாலின் பெருமைகளும் கண்ணனின் பிள்ளைமையும்

‘வண்ணமாடங்கள்’ எனத் தொடங்கும் திருமொழி கண்ணனின் திருவவதாரத்தையும் அதனால் ஆய்ப்பாடியில் நிகழ்ந்த கொண்டாட்டங்களையும் வருணிக்கின்றது. இதனைத் தொடரும் ‘சீதக்கடலுள்’ திருமொழியில் கண்ணனின் கமலபாதம் தொடங்கித் திருமுடி வரை அவனது அழகினைப் பாதாதிகேசமாக அனுபவிக்கின்றாள் அசோதை. தன்னைப்போலவே அவனழகை அனுபவிக்க ஆய்ப்பாடிப் பெண்களையும் ‘பாதக்கமலங்கள் காணீரே, பவளவாயீர் வந்து காணீரே’ என அழைக்கின்றாள்.

> *“முத்தும் மணியும் / வயிரமும் நன் பொன்னும் / ... ஒத்திட்டிருந்தவா காணீரே / ஒண்ணுதலீர் வந்து காணீரே” (பெரியாழ்வார் 1.3.2)*

இறைவனின் திருமேனியைத் தாம் மட்டும் அனுபவியாமல் பிறரையும் அழைத்துக் காட்டும் இந்நிலை, பக்தியைக் கூட்டு அனுபவமாக மாற்றும் ஆழ்வாரின் நோக்கைக் காட்டுகிறது.

‘மாணிக்கக் கட்டி’ என்னும் திருமொழியில் அசோதை கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுகின்றாள். தமிழில் இறைவனுக்குப் பாடப்பட்ட முதல் தாலாட்டு இதுவே என ஆய்வாளர் குறிப்பிடுவர் (Ate, *Yasoda's Songs*).

> *“மாணிக்கக் கட்டி வயிரம் இடை கட்டி / ஆணிப்பொன்னாற் செய்த வண்ணச் சிறுத்தொட்டில் / பேணி... / மாணிக் குறளனே தாலேலோ / வையம் அளந்தானே தாலேலோ” (பெரியாழ்வார் 1.4.1)*

வாமனனாகிய ‘மாணிக் குறளன்’, உலகை அளந்த திரிவிக்கிரமன் ஆகியோனைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் இம்முரண் நயமே பெரியாழ்வாரின் பக்தியின் அடிப்படை: இறைவனின் பரத்துவம் (மேன்மை) மறவாமலேயே அவனைத் தன்

குழந்தையாக அணுகும் எளிமை (சௌலப்யம்). இதனைத் தொடர்ந்து 'தன்முகத்து', 'உய்யவுலகு', 'மாணிக்கக்கிண்கிணி', 'தொடர் சங்கிலிகை', 'பொன்னியல் கிண்கிணி', 'வட்டுநடுவே' என்னும் ஆறு திருமொழிகளில் முறையே கண்ணனுக்காகச் சந்திரனை அழைத்தல், செங்கீரை ஆடுதல், சப்பாணி கொட்டுதல், தளர்நடை நடத்தல், தானே ஓடிவந்து தாயை அணைந்துகொள்ளுதல், தாயின் பின்புறமாக வந்து அவள் முதுகினைத் தழுவி நிற்றல் ஆகிய செயல்கள் பேசப்படுகின்றன.

இவை பிற்காலப் பிள்ளைத்தமிழின் பருவங்களான தாலாட்டு, செங்கீரை, சப்பாணி, வருகை, முத்தம், அமுலி (சந்திரனை அழைத்தல்) ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்புடையவை. எனவே பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கிய வகைக்கு வித்திட்டவர் பெரியாழ்வார் என்பது ஆய்வாளர் கருத்து (Richman; Zvelebil).

7. திருமாலின் விளையாட்டு

இரண்டாம் பத்தின் முதல் திருமொழியான 'மெச்சூதுசங்கம்' கண்ணன் அப்பூச்சி காட்டி விளையாடுவதை விவரிக்கின்றது. இதனைத் தொடரும் பதினைந்து திருமொழிகளில் கண்ணனைத் தாய்ப்பால் உண்ண அழைத்தல், காதுகுத்துதல், நீராட்டுதல், குழல்வாரக் காக்கையை அழைத்தல், காக்கையைக் கோல் கொண்டு வரவெனல், பூச்சூட்டுதல், காப்பிடுதல், ஆய்ச்சியர் கண்ணனின் தீம்புகளைச் சொல்லி அசோதையிடம் முறையிடுதல், மகனின் மானிடத்தன்மைக்கு அப்பாற்பட்ட செயல்களைக் கண்டு அசோதை அஞ்சுதல், அவனைக் கன்றுகளின் பின்னே அனுப்பியதை எண்ணி இரங்குதல், மாலையில் மீண்டுவரும் கோலங்கண்டு மகிழ்தல், கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்தல், குழலோசை கேட்டு எல்லா உயிர்களும் மயங்கி நிற்றல் ஆகியவை நூற்றுக்கு மேற்பட்ட பாசுரங்களில் வருணிக்கப்படுகின்றன (சீனிவாசன் 47).

> *"கொங்கைவன் / கூனிசொற் கொண்டு ... / அங்கண்ணன் அப்பூச்சி காட்டுகின்றான் / அம்மனே அப்பூச்சி காட்டுகின்றான்" (பெரியாழ்வார் 2.1.8)*

கூனியின் சொல்லால் காடு சென்ற இராமனையும், அசோதை மடியில் விளையாடும் கண்ணனையும் ஒரே பாசுரத்தில் இணைத்து, இறைவனின் அவதாரங்கள் அனைத்தும் ஒருவனே என்ற வைணவக் கொள்கையை ஆழ்வார் நிறுவுகிறார். மூன்றாம் பத்து ஆறாந் திருமொழியுடன் ஆழ்வாரின் கிருஷ்ணானுபவம் நிறைவடைகின்றது; எனினும் மேல்வரும் இரண்டு திருமொழிகளில் இவ்வனுபவம் வேறுவகையாக வெளிப்படுகின்றது.

8. அகப்பொருள் மரபும் தாயின் வருத்தமும்

'ஐயபுழுதி' என்னும் திருமொழி (3.7) மாயவன் மேல் மால்கொண்ட மகளின் நிலை குறித்துத் தாய் இரங்கும் பாசுரமாய் அமைந்துள்ளது.

"வாயில் பல்லும் எழுந்தில / மயிரும் முடி கூடிற்றில / மாயன் மா மணிவண்ணன் மேல் / இவள் மால் உறுகின்றாளே" (பெரியாழ்வார் 3.7.2)

பல்லும் முழுதாக முளைக்காத, கூந்தலும் முடியாக வளராத இளம்பெண் இறைவன்மேல் காதல் கொண்டதைக் கண்டு தாய் தவிக்கிறாள். இங்கு ஆழ்வார் கண்ணனைமட்டுமின்றி, மகளையும் வளர்த்த தாயாக நின்று பேசுகிறார்.

'நல்லதோர் தாமரை' என்னும் திருமொழியில் (3.8) கண்ணனோடு உடன்போன மகளைக் குறித்துத் தாய் வருந்துகின்றாள்.

"ஒன்றும் அறிவொன்றில்லாத / உருவறைக் கோபாலர் தங்கள் / ... ஓர் ஏச்சுக்கொல் ஆயிடுங்கொலோ" (பெரியாழ்வார் 3.8.2)

இவ்விரு திருமொழிகளும் நற்றாய் இரங்கல், உடன்போக்கு என்னும் சங்ககால் தமிழ் அகப்பொருள் துறைகளைத் தழுவியமைந்தவை. சங்க அகப் பாடல்களில் தலைவனோடு சென்ற மகளை எண்ணி இரங்கும் தாயின் குரல், இங்கு இறைவனை மருமகனாகக் காணும் பக்திக் குரலாக மாறுகிறது. இவ்வாறு கண்ணனைக் குழந்தையாகவும், தம் மகளை மணந்த மருமகனாகவும் காணும் இரட்டைநிலை இலக்கிய நயமும் பக்திச் சுவையும் கொண்டது. ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில் வெளிப்படும் நாயகி பாவனைக்கு இது முன்னோடியாகவும் அமைகிறது (Venkatesan; Hardy).

9. உந்தி பறத்தலும் இராமக் கதையும்

'என்னாதன்' என்னும் திருமொழியில் (3.9) ஆயர் மங்கையர் இருவருள் ஒருத்தி கண்ணனைப் பாடுகின்றாள்; மற்றொருத்தி இராமனைப் பாடுகின்றாள். அவ்விருவரும் 'உந்தி பறத்தல்' என்ற விளையாட்டின்படி ஒருவர்க்கொருவர் எதிர்நின்று ஆடிப்பாடுகின்றனர்.

"... என் வில் வலி கண்டு போ என்று / ... தன் வில்லின் வன்மையைப் பாடிப் பற / தாசரதி தன்மையைப் பாடிப் பற" (பெரியாழ்வார் 3.9.2)

ஒருத்தி கேள்வி கேட்க மற்றொருத்தி விடை கூறும் இவ்வினா-விடை முறை, மகளிர் நாட்டுப்புற விளையாட்டுப் பாடல் மரபிலிருந்து பிறந்தது. திருமாலின் புகழினை எளிய மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் ஆழ்வார் இம்முறையைப் பின்பற்றியுள்ளார். மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் உள்ள 'திருவுந்தியார்' பகுதியும் இதே விளையாட்டு மரபைத் தழுவியது என்பது இங்கு ஒப்பிடத்தக்கது.

'நெறிந்த கருங்குழல்' என்னும் திருமொழி (3.10) இலங்கைக்குச் சென்ற அனுமன் சீதையிடம் கூறிய அடையாளங்களைத் தொகுத்துரைக்கின்றது.

"அல்லியம் பூ மலர்க் கோதாய் / அடி பணிந்தேன் விண்ணப்பம் / ... மல்லிகை மா மாலை கொண்டு / அங்கார்த்ததும் ஓர் அடையாளம்" (பெரியாழ்வார் 3.10.2)

இராமனும் சீதையும் மட்டுமே அறிந்த நெகிழ்ச்சிமிக்க நிகழ்வுகளை அனுமன் அடையாளமாகக் கூறும் இப்பதிகம், இராமகாதையைத் தமிழ்ப் பக்தி மரபில் இணைத்துக் காட்டுகிறது. இலங்கைத் தீவில் நடந்ததை எடுத்துக்காட்டுவதோடு, இறைவனுக்கும் அடியாருக்கும் இடையே தூதுவனாக நின்ற அனுமனின் தொண்டையும் ஆழ்வார் போற்றுகிறார்.

10. இறைத்தேடலும் திவ்ய தேசச் சிறப்பும்

'கதிராயிரம்' என்னும் நான்காம் பத்தின் முதல் திருமொழியில் இறைவனைத் தேடுவாரும் அவனைக் கண்டவர் சிலருமாக, அவர்கள் பெற்ற அனுபவம் பேசப்படுகின்றது. எம்பிரானைக் கண்ணாலே காண வேண்டும் என்று தேடுவதை ஒரு குரலாகவும், 'அவனை உள்ளபடி கண்டவரும் உண்டு' என விடை கூறுவதை மற்றொரு குரலாகவும் கொண்டு இத்திருமொழி அமைகிறது.

நான்காம் பத்தில் எஞ்சியுள்ள ஒன்பது திருமொழிகளும் திருமாலிருஞ்சோலை முதலான திவ்ய தேசங்களையும் அவற்றில் கோயில்கொண்டுள்ள அர்ச்சாவதார எம்பெருமான்களையும் பாடுமுறையில் அமைந்துள்ளன. வைணவம் இறைவனுக்குப் பரம், வ்யூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என ஐந்து நிலைகளைக் கூறுகிறது; அவற்றுள் அடியார்க்கு எளிதில் கிட்டுவது கோயில்களில் உறையும் அர்ச்சை நிலையே (Carman and Narayanan). 'அலம்பா வெருட்டா' என்னும் திருமொழியில் (4.2) மாலிருஞ்சோலையைப் பாடும் ஆழ்வார் இராமாவதார நிகழ்வினை முதலில் கூறிப் பின்னரே கிருஷ்ணாவதார நிகழ்வினைக் குறிப்பிடுகின்றார். இதனைத் தொடரும் 'உருப்பிணி நங்கை' என்னும் திருமொழியில் (4.3),

> *"கஞ்சனும் காளியனும் / களிறும் மருதும் எருதும் / ... செஞ்சுடர் நா வளைக்கும் / திருமாலிருஞ்சோலை அதே" (பெரியாழ்வார் 4.3)*

என முதலில் கிருஷ்ணாவதார லீலைகளை அழகர் மேலிட்டு அனுபவித்து, அதன் பின்னர் இராமாவதாரச் சிறப்புகளை விளக்குகிறார். கோயில் கொண்ட இறைவனும் அவதாரம் எடுத்த இறைவனும் ஒருவனே என்பதை இவ்விணைப்பு உணர்த்துகிறது.

'மாதவத்தோன்', 'மரவடியை' என்னும் இரண்டு திருமொழிகளில் (4.8, 4.9), வைணவர்களால் 'கோயில்' என்றே சிறப்பிக்கப்படுவதும் திவ்ய தேசங்களுக்கெல்லாம் வேர்ப்பற்றாய் விளங்குவதுமான திருவரங்கத்தின் சிறப்புகளை ஆழ்வார் விளக்குகிறார்.

> *"குன்றாடு கொழு முகில் போல் / குவளைகள் போல் குரை கடல் போல் / ... மன்றாடு தென்றல் உலாம் / மதிள் அரங்கம் என்பதுவே" (பெரியாழ்வார் 4.8.9)*

மருத மரங்கள் முதலான பல்வேறு மரங்கள் நிறைந்திருக்கும் திருவரங்கத்தின் நிலவளத்தைப் பாடும் இம்முறை, சங்க இலக்கியத்தின் நிலவருணனை மரபைப் பக்திக்குப் பயன்படுத்தும் மற்றொரு சான்றாகும் (Hardy; Zvelebil).

11. அடியார் பெருமை

'நாவகாரியம்' என்னும் திருமொழியில் (4.4) திருக்கோட்டியூர் திவ்ய தேசத்தின் பெருமை பேசப்படுகின்றது. திருமாலின் திருவடிகளில் அன்பில்லாதவர்களைப் பழித்தும், அன்புள்ள அடியார்களைப் புகழ்ந்தும் ஆழ்வார் உருக்கமாகப் பாடுகிறார்.

> *"குற்றம் இன்றிக் குணம் பெருக்கிக் / குருக்களுக்கனுகூலராய் / ... பெற்ற தாயர் வயிற்றினைப் / பெரு நோய் செய்வான் பிறந்தார்களே" (பெரியாழ்வார் 4.4)*

எம்பெருமானை நெஞ்சாலும் நினையாதவர்களைப் பிரமன் எதற்காகப் படைத்தானோ, அறியோம் என ஆழ்வார் வினவுகிறார். வைணவ மரபில் இறைவனைக் காட்டிலும் அவன் எழுந்தருளியிருக்கும் நிலம் பெருமை பெறும்; அந்நிலத்தைக் காட்டிலும் அங்கு வாழ்ந்து இறைவனுக்குத் தொண்டு புரியும் அடியார்கள் பெருமை பெறுவர். இக்கருத்தின் விளைவாகவே அடியார்களின் பெருமை இத்திருமொழியில் விரிவாக விளக்கப்படுகிறது. 'அடியார்க்கு அடியார்' என்னும் பாகவதர் மரபு வைணவத்தின் அடிப்படை என்பதை வித்யா தேஹேஜியாவும் சுட்டிக் காட்டுகிறார் (Dehejia).

12. திருநாமச் சிறப்பு

இவ்வுலகில் உள்ள மக்களை ஏதேனும் ஒரு வழியாகத் திருமாலின் திருநாமத்தைச் சொல்ல வைக்க வேண்டும் என்று கருதினார் ஆழ்வார். 'காசுங்கறையுடை' என்னும் திருமொழியில் (4.6),

> *"... உச்சியில் எண்ணெயும் / சுட்டியும் வளையும் உகந்து / ... தம் அன்னை நரகம் புகாள்" (பெரியாழ்வார் 4.6)*

என்று மக்களை அழைத்து, நீங்கள் பெற்ற பிள்ளைகளுக்குத் திருமாலின் பெயரினை வையுங்கள்; அவர்களைத் திருமாலின் பெயர் கூறி அழையுங்கள்; அவ்வாறு அழைத்தால் அப்பிள்ளையின் தாய் நரகத்திற் புகாமல் காக்கப்படுவாள் என்று விளக்குகிறார். அறிந்தோ அறியாமலோ உச்சரிக்கும் திருநாமமே மீட்சிக்கு வழி என்ற இக்கொள்கை, பக்தியை கல்வி, சாதி, சடங்கு என்ற தடைகள் இன்றி அனைவருக்கும் திறந்துவிடுகிறது. இத்திருமொழியில் உள்ள பாசுரங்கள் அனைத்திலும் இறைவனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளைக் கூறிச் செல்கின்றார்.

13. பெரியாழ்வாரின் பக்தி நெறியின் தனித்தன்மைகள்

மேற்கண்ட பகுப்பாய்வின் வழி பெரியாழ்வாரின் பக்தி நெறியின் இயல்புகளைப் பின்வருமாறு தொகுக்கலாம்:

- **வாத்சல்ய பாவம்:** இறைவனைத் தம் குழந்தையாகக் காணும் தாய்மைக் காதலே அவரது பக்தியின் மையம். இறைவனைத் தாம் காக்க வேண்டும் என்ற கவலை திருப்பல்லாண்டிலேயே தொடங்குகிறது (Ate, *Yasoda's Songs*).

- **எளிமையும் பெருமையும்:** தொட்டிலில் தூங்கும் குழந்தையே வையம் அளந்தவன் என்ற இரட்டை உணர்வு திருமொழி முழுவதும் இழையோடுகிறது.
- **மரபுத் தொடர்ச்சி:** சங்க அகப்பொருள் துறைகளும் நாட்டுப்புற விளையாட்டுப் பாடல்களும் பக்திக்குரிய வடிவங்களாக மாற்றப்பட்டன.
- **அனைவருக்குமான பக்தி:** திருநாமமும் அடியார் தொண்டும் எளிய மக்களுக்கும் எட்டும் மீட்சி வழிகளாகக் காட்டப்படுகின்றன.
- **வெளிச் செல்வாக்கு:** ஆழ்வாரின் தாய்மை பாவனை பிற்காலத் தமிழ்ப் பிள்ளைத்தமிழ் நூல்களுக்கும், வடஇந்தியக் கிருஷ்ண பக்தி இலக்கியத்தில் காணப்படும் பாலகிருஷ்ண வழிபாட்டுக்கும் முன்னோடியாகக் கருதப்படுகிறது (Ate, *Yasoda's Songs*; Hardy).

14. ஆய்வுமுடிவுகள்

- ஒவ்வொரு ஆழ்வாரும் தமது பக்தியினை வெளிப்படுத்த இலக்கியத்தினைக் கருவியாகக் கொண்டிருந்தனர்; பெரியாழ்வார் தாய்மை பாவனையைத் தமது தனித்த வழியாகக் கொண்டார்.
- 461 பாசுரங்களுள் முதல் 25 திருமொழிகள் கண்ணனின் பிறப்பு முதல் இளமை வரையிலான வாழ்வை அசோதையின் குரலில் வரிசையாகச் சித்திரிக்கின்றன; இவை பிற்காலப் பிள்ளைத்தமிழின் பருவக் கூறுகளுக்கு முன்னோடிகள்.
- நற்றாய் இரங்கல், உடன்போக்கு போன்ற சங்க அகப்பொருள் துறைகளையும், உந்தி பறத்தல் போன்ற மகளிர் விளையாட்டுப் பாடல்களையும் ஆழ்வார் பக்தி வெளிப்பாட்டிற்குப் பயன்படுத்தியுள்ளார்.
- கிருஷ்ணாவதாரமும் இராமாவதாரமும் ஒன்றோடொன்று பின்னிப் பாடப்படுவதால், அவதாரங்கள் அனைத்தும் ஒருவனே என்ற வைணவக் கொள்கை நிறுவப்படுகிறது.
- திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், திருவரங்கம் முதலான திவ்ய தேசங்களைப் பாடி, அர்ச்சை நிலையில் இறைவன் அடியாருக்கு எளிதில் கிட்டும் நிலையை ஆழ்வார் உறுதிப்படுத்துகிறார்.
- அடியார் பெருமையும் திருநாமச் சிறப்பும் பக்தியை அனைவருக்கும் உரியதாக்கும் சமூகநோக்கைக் காட்டுகின்றன.
- மனிதப் பிறவிக்குத் துணையாகவும் அரணாகவும் இருப்பவன் திருமால் என்பதை ஆழ்வார் தமது பாசுரங்களில் எடுத்துக்காட்டியுள்ளார்.

15. முடிவுரை

பெரியாழ்வாரின் பக்தி நெறி அன்பால் இறைவனை அணுகும் நெறி; அச்சமோ சடங்கோ அதன் அடிப்படை அன்று. உலகை அளந்த பரமனைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் தாயாகத் தம்மைப் பாவித்ததன் வழி, இறைவனுக்கும் மனிதனுக்குமான இடைவெளியை அவர் இல்லாமல் ஆக்கினார். சங்க அகமரபு, நாட்டுப்புற விளையாட்டுப் பாடல், இதிஹாசக் கதை, திவ்ய தேச வருணனை ஆகிய அனைத்தையும் ஒரே பக்திக் காதலின் வெளிப்பாடாக அவர் இணைத்துள்ளார்.

இதனால் அவரது திருமொழி வைணவ இறையியல் நூலாக மட்டுமன்றி, பிற்காலத் தமிழ்ச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்ட இலக்கியமாகவும் திகழ்கிறது. ஐந்தாம் பத்தின் சரணாகதிப் பாசுரங்களையும், பெரியாழ்வாரின் தாய்மை பாவனைக்கும் ஆண்டாளின் நாயகி பாவனைக்குமான தொடர்பையும் ஒப்பிட்டு ஆராய்வது மேலாய்வுக்குரிய தளங்களாகும்.

துணைநூல் பட்டியல் (Works Cited – MLA 9)

Ate, Lynn, translator. *Yasoda's Songs to Her Playful Son, Kṛṣṇa: Periyāḻvār's 9th Century Tamil Tirumoḻi*. By Periyāḻvār, South Asian Studies Association, 2011.

Carman, John, and Vasudha Narayanan. *The Tamil Veda: Piḷḷāṉ's Interpretation of the Tiruvāymoḻi*. U of Chicago P, 1989.

Dehejia, Vidya. *Slaves of the Lord: The Path of the Tamil Saints*. Munshiram Manoharlal, 1988.

Hardy, Friedhelm. *Viraha-Bhakti: The Early History of Kṛṣṇa Devotion in South India*. Oxford UP, 1983.

பெரியாழ்வார் [Periyāḻvār]. "பெரியாழ்வார் திருமொழி" [Periyāḻvār Tirumoḻi]. *Yasoda's Songs to Her Playful Son, Kṛṣṇa: Periyāḻvār's 9th Century Tamil Tirumoḻi*, translated by Lynn Ate, South Asian Studies Association, 2011.

Richman, Paula. *Extraordinary Child: Poems from a South Indian Devotional Genre*. U of Hawai'i P, 1997.

சீனிவாசன், ம. பெ. [Srinivasan, M. P.]. *பெரியாழ்வார்* [Periyāḻvār]. இந்திய இலக்கியச் சிற்பிகள் [Makers of Indian Literature], சாகித்திய அகாதெமி [Sahitya Akademi], 1996.

Varadarajan, Mu. *A History of Tamil Literature*. Translated by E. Sa. Viswanathan, Sahitya Akademi, 1988.

Venkatesan, Archana, translator. *The Secret Garland: Āṇṭāḷ's Tiruppāvai and Nācciyār Tirumoḻi*. Oxford UP, 2010.

Zvelebil, Kamil V. *Tamil Literature*. E. J. Brill, 1975. Handbuch der Orientalistik.

References

Ate, Lynn, translator. Yasoda's Songs to Her Playful Son, Kṛṣṇa: Periyāḻvār's 9th Century Tamil Tirumoḻi. By Periyāḻvār, South Asian Studies Association, 2011.

Carman, John, and Vasudha Narayanan. The Tamil Veda: Piḷḷāṉ's Interpretation of the Tiruvāymoḻi. U of Chicago P, 1989.

Dehejia, Vidya. Slaves of the Lord: The Path of the Tamil Saints. Munshiram Manoharlal, 1988.

Hardy, Friedhelm. Viraha-Bhakti: The Early History of Kṛṣṇa Devotion in South India. Oxford UP, 1983.

பெரியாழ்வார் [Periyāḻvār]. "பெரியாழ்வார் திருமொழி" [Periyāḻvār Tirumoḻi]. Yasoda's Songs to Her Playful Son, Kṛṣṇa: Periyāḻvār's 9th Century Tamil Tirumoḻi, translated by Lynn Ate, South Asian Studies Association, 2011.

Richman, Paula. Extraordinary Child: Poems from a South Indian Devotional Genre. U of Hawai'i P, 1997.

சீனிவாசன், ம. பெ. [Srinivasan, M. P.]. பெரியாழ்வார் [Periyāḻvār]. இந்திய இலக்கியச் சிற்பிகள் [Makers of Indian Literature], சாகித்திய அகாதெமி [Sahitya Akademi], 1996.

Varadarajan, Mu. A History of Tamil Literature. Translated by E. Sa. Viswanathan, Sahitya Akademi, 1988.

Venkatesan, Archana, translator. The Secret Garland: Āṇṭāḷ's Tiruppāvai and Nācciyār Tirumoḻi. Oxford UP, 2010.

Zvelebil, Kamil V. Tamil Literature. E. J. Brill, 1975. Handbuch der Orientalistik.